**சுருக்கம்**

முதலமைச்சரின் அறிவிப்பு – சென்னை மாவட்டம் – சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கோட்டம்–37 மற்றும் 38, மண்டலம் – 3 ல் உள்ள பெரம்பூர் மேம்பாலத்திற்கு திரு. முரசொலி மாறன் மேம்பாலம்" என பெயர் சூட்டிட சென்னை மாநகராட்சிக்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை**

**அரசாணை (நிலை) எண்.92** **நாள்: 14.05.2010**

**சித்திரை–31, திருவள்ளுவர் ஆண்டு–2041**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.2) துறை, நாள் 30.6.1998.
2. அரசாணை (ப) எண்.573, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14.12.2001.

**மேலும் படிக்க:**

3. சென்னை மாநகராட்சி ஆணையர் (பொ) அவர்களின் கடித நி.(ம).உ.துறை ந.க.எண். எல்இ1/0284/2010, நாள் 05.05.2010

* * * * *

**ஆணை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.03.2010 அன்று நடைபெற்ற "பெரம்பூர் மேம்பாலத் திறப்பு விழா" நிகழ்ச்சியில் கீழ்க்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்கள்:

> **"இந்தப் பாலத்திற்கு, எம்.பி.யாக, மத்திய அமைச்சராகப் பணியாற்றியதோடு, தோகா மாநாடு வரையிலே சென்று இந்திய நாட்டின் குரலை ஓங்கி ஒலித்த முரசொலி மாறன் பெயரை இந்தப் பாலம் பெறட்டும்"**

2. சென்னை மாநகராட்சி ஆணையர் மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சித் தீர்மான எண்.196, நாள் 29.04.2010–ல் முதலமைச்சரின் அறிவிப்பினை செயல்படுத்த சென்னை மாநகராட்சி மன்றத்தில் கோட்டம்–37 மற்றும் 38, மண்டலம் – 3 ல் உள்ள பெரம்பூர் மேம்பாலத்திற்கு திரு. முரசொலி மாறன் மேம்பாலம்" என பெயர் சூட்டுவதற்கு மன்றம் அனுமதி அளித்துள்ளது எனவும், எனவே இதற்கு அரசின் ஆணை வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. சென்னை மாநகராட்சி ஆணையரது முன்மொழிவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையை தளர்த்தி சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, கோட்டம்–37 மற்றும் 38, மண்டலம் – 3 ல் உள்ள பெரம்பூர் மேம்பாலத்திற்கு திரு. முரசொலி மாறன் மேம்பாலம்“ என பெயர் சூட்டிட சென்னை மாநகராட்சிக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–600 003.
சென்னை மாவட்ட ஆட்சியர், சென்னை– 600 001.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், சென்னை–600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் செயலர், சென்னை– 600 009.
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (அந2) துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்